# ஸ்வர்ண ஜெயந்தி அறிக்கை

ஐம்பதாவது ஆண்டில் பொன்விழாக் காணும் விவேகானந்தாக் கல்விக் கழகத்தின் **ஸ்வர்ண ஜெயந்தி மங்கள ஆரத்தி** தொடக்க விழா **ஜி.ஆர்.தங்கமாளிகை மகாலட்சுமி விவேகானந்தா வித்யாலயா** பள்ளியில் 12.10.2023 வியாழன் அன்று இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

நிகழ்வின் தொடக்கமாக பள்ளி முதல்வர் டாக்டர். எஸ். பொன்பாண்டியன் ஐயா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கடவுள் வரும் இடத்தில் தர்மம் உண்மையானது என்றும், மனிதனை உருவாக்கும் கல்வி விவேகானந்தா கல்விக் கழகம் மட்டுமே என்றும், இன்று 25 – க்கும் மேற்பட்ட பள்ளிகள் உருவாகி மாபெரும் மரமாக வளர்ச்சியடைந்துள்ளது பெருமைக்குரியது என்றும், இலாப நோக்கமற்ற கழகமாக உருவாகி மிகப்பெரிய நிறுவன கட்டமைப்பாக பொன்விழாக் காணும் நமது விவேகானந்தா கல்விக் கழகம் தன்னிகரற்று திகழ்கிறது என உள்ளங்கையில் நெல்லிக்கனிப் போல மிகத் தெளிவாக தனது சிறப்புரை மூலம் மெய்ப்பித்தார்.

கலை நிகழ்வின் தொடக்கமாக மாணவச் செல்வங்கள் பக்தியுடன் பஜன் பாடல்களைப் பாடி அனைவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினர். பாரத மாதாவின் சிறப்பம்சங்களை எடுத்தியம்பும் வகையில் மாணவிகளின் பரத நாட்டிய நடனம் சிறப்பாக இருந்தது. மாணவர்கள் குழுப்பாடலின் மூலம் தேசப்பற்றை வெளிப்படுத்தினர்.

பள்ளியின் தாளாளர் திரு. பிரவின் கர்க் ஐயா அவர்கள் விவேகானந்தா கல்விக் கழகத்தின் தோற்றம் மற்றும் அதன் வளர்ச்சி பற்றி உரை ஆற்றினார். மேலும் விவேகானந்த கல்விக் கழகத்தை நிறுவியவர்கள் முதல் தற்போதைய தலைவர்களின் பெயர்கள் வரை உள்ள அட்டவணையை திறன்பட எடுத்துரைத்தார். விவேகானந்தா கல்விக் கழகத்தின் பலம் ஆசிரியர்கள் என்றும் தேசப்பற்று மிக்க தலைவர்கள் நமது விவேகானந்தா கல்விக் கழகத்தில் உள்ளனர் என்பதை நினைத்து நாமும் அனைவரும் பெருமைப்படவேண்டும் என உணர்ச்சிப் பொங்கும் பேச்சாற்றலால் அனைவரது உள்ளங்களிலும் பசுமரத்தாணிபோல் பதிய வைத்தார்.

பள்ளியின் துணைத் தாளாளர் திரு. மாதவன் ஐயா அவர்கள் சனாதன தர்மத்தை உயர்த்த அன்னிய சக்திகளை உடைத்து நம் கலாச்சாரத்தை தூக்கி நிறுத்த வேண்டும். சுயநலம் இல்லாத நல்ல மனிதர்களின் கோப்பு நம் விவேகானந்தா கல்விக் கழகத்தில் உள்ளனர் என்றும், விவேகானந்தா கல்விக் கழகத்தின் இலட்சியம் தொடர்ந்து ஒலிக்க அனைவரும் நேர்மையுடனும், உண்மையுடனும் செயல்படுவோம் என தனது ஊக்கமளிக்கும் பேச்சாற்றலால் ஆசிரியர்களை ஊக்குவித்தார்.

இறுதியாக சாந்தி மந்திரத்துடன் விழா நிறைவடைந்தது.